2nd November 1957]

Second Language Test

* 63 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state with reference to the answer to Question No. 54, dated 3rd July 1957, whether the Government have taken a decision in regard to the Second Language Test?

THE HON. SRI C. SUBRAMANIAM : No decision has yet been arrived at.

* 64 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state whether any decision has since been reached in regard to the proposal to abolish language test for the Non-Gazetted Officers in view of the States Reorganization?

THE HON. SRI C. SUBRAMANIAM : No decision has yet been reached.

SRI N. K. PALANISAMI : ஸ்டேட்ஸ் ரீ ஆர்கனைசிங்கிற்குப் பிறகு இந்தமாதிரி டெஸ்டுக்கு அவசியம் இல்லை. இனிமேலாவது சேர்க்கப்படக் கூடிய என். ஜி. ஓ.க்களுக்கு பாஷை டெஸ்டு அவசியம் இல்லை என்று செய்வார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைப்பற்றி ஆலோசனை நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் சில பாஷைகள் தெரிந்திருப்பதில் சில உபயோகங்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : நமது பக்கத்தில் இருக்கக் கூடிய ராஜ்ய மொழியைத் தெரிந்து கொள்வது அவசியம் தான். இப் போது தமிழ் தெரியாதவர்கள் நிச்சயமாக தமிழ் பரீட்சை எழுதவேண்டியது அவசியமாக இருக்கிறது என்பதை ஒத்துக் கொள்கிறேன். பாக்கிப் பேர்க ளுக்கு பரீட்சை வேண்டுமா வேண்டாமா என்பதைப்பற்றி முடிவு செய்யும் வரையிலாவது இந்தப் பரீட்சையை நிர்ப்பந்தப்படுத்தாது ஒத்திப்போடுவார் களா என்று கேட்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதுபற்றிய முடிவு சீக்கிரமே எடுக்கப்படும். ஒத்திப்போடும் யோசனைக்கு அவசியமே இருக்காது.

SRI K. R. VISWANATHAN : இரண்டாவது மொழியில் தேர்ச்சி பெற வேண்டுமென்பதற்காக வயது வந்த, உத்தியோகத்தில் உயர்வு .பெறக் கூடிய நிலைமையில் உள்ளவர்களுடைய திறமை கவனிக்கப்படாமல் இருக் கிறது. இம்மாதிரி இருக்கக்கூடியவர்களுக்காவது மொழிப் பரீட்சை தேர்ச் சியடையாவிட்டாலும் உயர்வு கொடுக்க விதிவிலக்கு அளிப்பார்களா முடிவு எடுப்பதற்கு முன் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : முடிவு எடுப்பதற்கு முன்னால் உடனடியாகச் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. சீக்கிரமே ஒரு முடிவு எடுக்க முயற்சிக்கிறோம். பிற்பாடு இதன் மூலம் யாருக்காவது கஷ்டம் ஏற்பட்டால் விதி விலக்கு அளிப்பதன் மூலம் அவர்களுடைய கஷ்டத்தை நிவர்த்திக்க ஏற்பாடு செய்யலாம்.

SRI A. VEDARATHNAM PILLAI : இவர்களுக்கு தேசிய மொழி ஆகிய இந்தி டெஸ்டு உண்டா ? இல்லையானால் அதைச் சேர்க்க அரசாங்கம் யோசிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது ஒரு தனிப்பட்ட பிரச்சனை. இப்போது கேட்டிருக்கக்கூடிய கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. இந்தியைப் பற்றி தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்லுகிறேன்.